# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பொது நூலகத் துறை – நூலகவரி வருவாய் உள்ளாட்சி நிறுவனங்கள் நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்துதல் – நிலுவைத் தொகையை உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து 4 தவணைகளில் வசூலித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி (தே1) துறை

அரசாணை (நிலை) எண் 294 நாள் 11.7.1997.

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை நிலை எண் 492, கல்வி நாள் 19.5.92
2. அரசாணை நிலை எண் 367 கல்வி நாள் 7.4.93
3. பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண் 21422/இ1/93 நாள் 30.11.93.
4. பொது நூலக இயக்குநரின் நேர்முகக் கடித எண் 8444/இ1/95 நாள் 23.5.97.

.....

**ஆணை :**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948ன் பிரிவு 12ன் கீழ், பார்வை 1ல் கண்ட அரசாணைப்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களும் தாங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் 1 ரூபாய்க்கு 10 காசுகள் என்ற விகிதத்தில் நூலக வரியாக சம்பந்தப்பட்ட நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்த வேண்டும். இருப்பினும், உள்ளாட்சி நிறுவனங்கள் உடனுக்குடன் நூலக வரியைச் செலுத்தாததால், நூலக ஆணைக் குழுக்களின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதால், நூலக வரியைச் செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு வழங்கும் இணை மானியத்திலிருந்து பிடித்தம் செய்து மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்த பார்வை 2ல் கண்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

(2) பார்வை 3ல் கண்ட தமது கடிதத்தில், பொது நூலக இயக்குநர், சில நடைமுறைச் சிக்கல்களினால் இந்த ஆணை முழுமையாக செயல்படுத்தப்படவில்லையென்றும், எனவே நூலக வரி வசூலைக் கண்காணித்து, உடனுக்குடன் இதனை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளடங்கிய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார். பார்வை 4ல் கண்ட தமது கடிதத்தில், வசூல் செய்யப்படும் நூலக வரியை உள்ளாட்சி நிறுவனங்கள் அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு உடனுக்குடன் செலுத்தாததால், 31.3.97 தேதிய நிலவரப்படி, அனைத்து மாவட்டங்களிலும் கீழே குறிப்பிட்டவாறு ஏறத்தாழ ரூ.26,13,46,156/- நூலக வரி நிலுவையிலுள்ளதென பொது நூலக இயக்குநர் அரசின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளார்.

.../2....

| | | |
|---|---|---|
| மாநகராட்சிகள் | - | ரூ. 8,69,42,313 |
| நகராட்சிகள் | - | ரூ.13,40,67,763 |
| பேரூராட்சிகள் | - | ரூ. 3,32,45,151 |
| நகரியங்கள் | - | ரூ. 18,56,392 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | - | ரூ. 52,34,537 |
| மொத்தம் | - | ரூ.26,13,46,156 |

இந்த நிலைத் தொகை பற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(3) இவ்வாறு பெருந்தொகையினை நூலக ஆணைக் குழுக்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்கள் செலுத்தாதது குறித்து அரசு ஆராய்ந்தது. நூலக வளர்ச்சிப் பணிக்கு நூலக வரியினை ஊராட்சிகள் தவறாது செலுத்த வேண்டிய அத்தியாவசியத்தைக் கவனத்தில் கொண்டு, உள்ளாட்சி நிறுவனங்கள் நூலகக் குழுக்களுக்குச் செலுத்த வேண்டிய நூலக வரியினை நிலுவையின்றி அந்தந்த ஆண்டே தவறாமல் சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்த வேண்டுமென்று, அரசு ஆணையிடுகிறது. அது மட்டுமின்றி உள்ளாட்சி நிறுவனங்கள் இதுகாறும் செலுத்தாத, மேற்தெரிவிக்கப்பட்டவாறு 31.3. தேதிய நிலவரப்படி நிலுவையில் உள்ள தொகையான ரூ.26,13,46,15 மொத்தம் நான்கு ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டுமென்றும், முதல் ஆண்டில் ஐந்தில் இரண்டு பங்கு தவணைத் தொகையினையும், மீதமுள்ள மூன்று பங்கினை அடுத்த மூன்று ஆண்டுத் தவணைகளிலும் மாவட்ட நூலக ஆணைக் குழு நிதிக்கு செலுத்த வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(4) 1997-98ம் நிதி ஆண்டிலிருந்து அவ்வாறு நூலக வரியை ஊராட்சி நிறுவனங்கள் அந்தந்த ஆண்டே நிலுவையின்றி செலுத்தத் தவறினால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு அவ்வாண்டில் வழங்கும் மானியத்திலிருந்து நிலுவையில் உள்ள நூலக வரியினை பிடித்தம் செய்து மாவட்ட நூலக ஆணைக் குழு நிதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(5) இந்த ஆணை நிதித் துறை இசைவுடன் அதன் அலுவல் சா குறிப்பு எண் 3064/எஃப்எஸ்./பி/97 நாள் 24.6.97ன்படி வெளியிடப்

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. சௌரிசங்கர்.
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர், சென்னை-2.
இயக்குநர், நகராட்சி-நிர்வாகம்.
இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-104.
பேரூராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
ஆணையர், சென்னை/மதுரை/கோவை/திருச்சி/சேலம்/திருநெல்வேலி மா
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-103.
அனைத்து மாவட்ட நூலக அலுவலர் (பொது நூலக இயக்குநர் வழியாக

நகல்: இணைச் செயலாளர், கல்வியமைச்சர், சென்னை-9.
பள்ளிக் கல்வி (எல்.1) சென்னை-9.
நிதித் துறை, சட்டத் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சித் துறை, சென்னை-9.
நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

பிரிவு அலுவலர் 17/7/77

மாவட்ட நூலக அலுவலர்
திருவள்ளூர்